2023

QUESTION PAPER

AGLASEM.COM

TAMIL

Maximum Marks: 80

Time Allowed: Three hours

*(Candidates are allowed **additional 15 minutes** for **only** reading the paper. They must **NOT** start writing during this time.)*

*Answer **Questions 1, 2 and 3 in Section A** and **four** questions from **Section B** on **any three** out of the four prescribed textbooks.*

The intended marks for questions or parts of questions are given in brackets [ ].

SECTION A

LANGUAGE - 40 MARKS

Question 1 **[15]**

Write a composition in approximately 400 words in Tamil on any *one* of the topics given below:

கீழ்க்கண்டவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு 400 வார்த்தைகளில் ஒரு கட்டுரை தமிழில் எழுதுக

(i) "காடுகள் ஒரு நாட்டின் பாதுகாக்கப் படவேண்டிய செல்வம்" என்னும் தலைப்பில் காடுகளின் முக்கியத்துவம்,பயன்கள், மற்றும் காடுகளை அழித்தலால் ஏற்படும் தீமைகளை விளக்கி ஒரு கட்டுரை வரைக .

(ii) உனக்குப் பிடித்த குழந்தைப் பருவ நினைவுகளில் ஏதேனும் ஒன்றைப் பற்றி ஒரு கட்டுரை வரைக .

(iii) "இளம் பருவத்தினரின் மன மற்றும் சமூக வளர்ச்சியில் மின் சாதனங்களும் அவற்றின் தாக்கங்களும் என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வரைக .

(iv) "கடினமாக வேலை (hard work) செய்வதை விட புத்திசாலித்தனமாக வேலை (smart work) செய்வதே சிறந்தது"இக் கருத்தை ஏற்றோ அல்லது எதிர்த்தோ ஒரு கட்டுரை வரைக.

(v) இணைய வழியில் பொருள் வாங்குதலில் (online shopping) உள்ள நன்மை தீமைகளைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

This Paper consists of 10 printed pages.

© Copyright reserved.

(vi) கீழ் வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றுக்கு மூலச் சிறுகதையை எழுதுக

(a) "இது வாழ்வின் முடிவல்ல ,புதிய துவக்கம் என்பதை உணர்ந்து கொண்டேன் " என முடியும் ஒரு சிறு கதை எழுதுக.

(b) ".....இவ்வாறாக நான் எனது கருத்தை மாற்றிக் கொண்டேன் " என முடியும் ஒரு சிறுகதை எழுதுக.

Question 2

Read the passage given below carefully and answer the questions that follow, using your own words in Tamil:

பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துணர்ந்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி:

மாணவர்களின் மனதில் உயர்ந்த நோக்கத்தை ஏற்படுத்தி ஒரு சரியான அமைப்பை உருவாக்குவதே ஆசிரியரின் பணி. மாணவர்கள் ஒன்று சேரும் போது குரூப் டைனமிசம் (Group Dynamism) வரும் .

குள்ள வாத்துப் பறவைகள் வானில் பறக்கும் சமயம் ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் பறந்து செல்லும். ஏரோ டைனமிக் உந்துதலைப் பயன்படுத்திக் காற்றைக் கிழித்துக் கொண்டு செல்லும் சக்தி வாய்ந்த பறவை முதலில் செல்லும். அந்தப் பறவை சோர்வடைந்தால் அது பின்னால் சென்று விடும். பின்னே உள்ள பறவை முதலில் செல்லும். இவ்வாறு ஒன்றுக்கொன்று அனுசரித்துக் கொண்டு செல்லும்.

மாணவர்களும் ஒருவருக்கொருவர் குறைகளையும் நிறைகளையும் அனுசரித்துக் கொண்டு செல்ல வேண்டும். இந்த குரூப் டைனமிசத்தை உணர்த்துவது ஆசிரியர்களுடைய கடமை.
" நாம் அனைவரும் ஒன்றே" என்ற உணர்வை உண்டாக்குவதும் ஆசிரியரின் கடமையாகும். அடுத்து, எதுவுமே என்னால் முடியும் என்பதை மாணவர்களுக்கு உணர்த்துவது ஆசிரியரது கடமை.
ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு கதை கூறுவார். ஒருவர் வயல் வரப்பில் தன் குழந்தைகளுடன் நடந்து சென்று கொண்டிருந்தார்.சின்னக் குழந்தையைத் தோளில் தூக்கிக் கொண்டார். இளையவனின் கையைப் பிடித்துக் கொண்டு அழைத்துச் சென்றார். பெரியவன் அவரைப் பின் தொடர்ந்தான்.

அப்பாவின் தோளிலிருக்கும் குழந்தை பயப்படாமல் , பறவை, சூரியன், நதி ஆகியவற்றைப் பார்த்துக்கொண்டு சந்தோஷமாக இருந்தது. அப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டுள்ள குழந்தைக்கு, தான் சறுக்கி விழுந்து விடுவோமோ என்று பயம்தான். ஆனாலும் அப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டிருப்பதால் விழ மாட்டோம் என்ற பாதுகாப்பு உணர்வு இருந்தது.

பின்னே நடந்து வரும் பையனோ மலர்கள், பறவைகள், சூரியன், நதி என எதையும் பார்த்து ரசிக்கவில்லை. எங்கு வழுக்கி விழுந்து விடுவோமோ என்ற பயத்தால் வரப்பை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தான்.

யார் முழுவதுமாகத் தன்னைக் கடவுளிடம் ஒப்படைக்கிறாரோ, அவர் அப்பாவின் தோளிலுள்ள குழந்தை போல பயமின்றி இருப்பார்.

இறைவனிடமும், ஆசிரியரிடமும் நம்பிக்கை இல்லாமல் எல்லாம் நானே செய்வேன் என்று செயல்படுபவர், பின்னால் நடந்து வரும் மூன்றாவது குழந்தையைப் போன்றவர்.

நாம் அடையும் வெற்றிகளுக்கும் முன்னேற்றத்திற்கும் ஆசிரியர்களின் துணை தேவை. ஆசிரியர்களிடம் அன்பையும், நம்பிக்கையையும்,பக்தியையும் நாம் விலையாகத் தந்தால் நமக்கு வேண்டிய சக்தியையும் ஆற்றலையும் திறமையையும் இறைவனும் ஆசிரியரும் நமக்கு அளிப்பர்.

கேள்விகள்:

(i) குரூப் டைனமிசம் என்பதை எடுத்துக் காட்டுடன் விளக்குக. **[3]**

(ii) மூன்றாவது குழந்தையை யாருடன் ஒப்பிடுகிறார்?ஏன்? **[3]**

(iii) பயமின்றி இருக்கும் குழந்தை யார்?விளக்குக. **[3]**

(iv) கீழ்க் கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(a) நம் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு _____ துணை தேவை **[1]**

(1) சகோதரியின்

(2) ஆசிரியர்களின்

(3) நண்பனின்

(4) மகனின்

(b) மாணவர்கள் ஒன்று சேரும் போது என்ன வரும் ? [1]

(1) நட்பு

(2) மகிழ்ச்சி

(3) குரூப் டைனமிசம்

(4) ஒருமைப்பாடு

(c) குள்ள வாத்துப் பறவைகள் _____ உந்துதலைப் பயன் படுத்தும் [1]

(1) ஏரோ டைனமிக்

(2) குரூப் டைனமிக்

(3) சக்தி

(4) கைனெடிக்

(v) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

(a) எதுவுமே என்னால் முடியும் என்பதை மாணவர்களுக்கு உணர்த்துவது ஆசிரியரது _____ [1]

(1) கடமை

(2) பொறுப்பு

(3) பணி

(4) முயற்சி

(b) அப்பாவின் தோளிலிருக்கும் குழந்தை எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு _____ இருந்தது. [1]

(1) பக்தியின்றி

(2) சந்தோஷமாக

(3) பொறுப்பின்றி

(4) பயத்தோடு

(c) வயல் வரப்பில் நடந்து சென்றவர் யாருடைய கையைப் பிடித்து அழைத்துச் சென்றார்? [1]

(1) மூத்தவனின்

(2) சின்னவனின்

(3) நண்பனின்

(4) இளையவனின்

Question 3

(A) Correct the following sentences and rewrite as per the instructions given:

கீழ்க்கண்ட வாக்கியங்களில் பிழை நீக்கி கூறியபடி எழுதுக.

பிழை நீக்கி எழுதுக :

(i) மாணவன் ஆசிரியறிடம் தன் ஐயத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டனர். [1]

(ii) நாண் நாளை ஊருக்குப் போனேன். [1]

(iii) பிழையற்ற வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக . [1]

(a) கட்டுரை எழுதுவது ஒரு கலை

(b) கட்டுரை எலுதுவது ஒரு கழை

(c) கட்டுறை எழுதுவது ஒரு களை

(d) கட்டுரை எளுதுவது ஒறு கலை

(iv) வாக்கியத்தைத் [1]

(a) யாணைக்கும் அடி செருக்கும்

(b) யானைக்கும் ஆதி சறுக்கும்

(c) யானைக்கும் அடி சறுக்கும்

(d) யாணைக்கும் அடி சருக்கும்

(v) வாக்கியத்தைத் [1]

(a) சிறு துறும்பும் பால் குத்த உதவும்

(b) சிரு துறும்பும் பள் குத்த உதவும்

(c) சிரு துரும்பும் பள் குத்த வுதவும்

(d) சிறு துரும்பும் பல் குத்த உதவும்

(B) **Use the idioms in the sentence as per the instructions given:**

வாக்கியத்தில் அமைத்து எழுதுக:

(i) சந்து பொந்து [1]

(ii) கண்ணும் இமையும் போல [1]

சரியான மரபுச் சொல்லை தேர்ந்தெடுத்து நிரப்புக:

(iii) பாபு தன் குடும்பத்தைக் காப்பாற்ற _____ பாடுபட்டான் [1]

(a) அணி அணியாய்

(b) அல்லும் பகலும்

(c) போற்றிப் புகழ்ந்து

(d) வாழையடி வாழையாய்

(iv) திருடன் காவலரிடம் _____ பிடிபட்டான் [1]

(a) கையும் களவுமாகப்

(b) நகமும் சதையுமாகப்

(c) உள்ளும் புறமுமாகப்

(d) கள்ளமின்றிப்

(v) அவன் நான் எதைச் செய்தாலும் _____ செய்து என்னைக் கோபப்பட வைப்பான் [1]

(a) சீரும் சிறப்புமாய்

(b) கைப்பாவையாய்

(c) மலர்ந்த முகத்துடன்

(d) ஏட்டிக்குப் போட்டியாய்

SECTION B

LITERATURE - 40 MARKS

*Answer **four** questions from this section on **any three** out of the four prescribed textbooks.*

பின்வரும் வினாக்களுள் ஏதேனும் நான்கனுக்கு உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மூன்று பாடப் புத்தகங்களிலிருந்து விடையளி

பொது தமிழ் (PODHU TAMIL)

Question 4

".....கற்பு எனும் பெயரது ஒன்றும் களி நடம் புரியக் கண்டேன்"

(i) "உயிர் தந்து ஈயும் மருந்தொத்தது"என்று அனுமன் குறிப்பிடுவது எது?ஏன் ? [1]

(ii) "கண்டெனென்"என்று அனுமன் கூறியவை யாவை? [2]

(iii) இராமன் குறிப்பால் உணர்ந்தவை யாவை? [2]

(iv) சீதை இராமனுக்குச் சொல்லி அனுப்பிய செய்தியும் அடையாளமும் பற்றி எழுதுக. [5]

Question 5 [10]

"செய்ந்நன்றி அறிதல்" பற்றி வள்ளுவர் கூறியனவற்றை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?

Question 6 [10]

கோலியாத்து என்ற அரக்கனின் வருகையும்,தாவீதன் அவனை வென்ற திறத்தினையும் உணர்த்துக.

கதைக் கோவை (KADHAI KOVAI)

Question 7

"அந்த வட்டாரத்தில்,பெண் குழந்தை பிறந்து விட்டால், அந்த வீடு இழவு வீடுதான்."

(i) ரிச்சர்ட் ராமாயியிடம் கொடுக்கச் சொன்ன பணம் எவ்வளவு? [1]

(ii) சூரப்பட்டியில் பெண் குழந்தை பிறந்தால் என்ன செய்வர்? [2]

(iii) கோவிராஜ் யார்?அவர் ராமாயியின் மூன்றாவது குழந்தையை என்ன செய்தார்? [2]

(iv) சின்னத்தாயி, பேட்டி காண வந்த பத்திரிக்கைக் காரர்களிடம் கூறியது என்ன? [5]

Question 8

[10]

"பழிக்குப்பழி" கதையில் கிட்டு தன் சிறுவயது,குடும்பச் சூழ்நிலை,அண்ணன் தனக்குச் செய்த உதவிகள் இவற்றைக் கற்பனை செய்து பார்ப்பதாக ஒரு கதை எழுதுக .

Question 9

[10]

"மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து"- இக்கதையைத் திறனாய்வு செய்க.

சினேகிதி (SINEKITHI)

Question 10

"இரவு இரண்டு மணியாயிற்று.விழுப்புரம் ஸ்டேஷனில் வண்டி நின்றது."

(i) துரை எந்த ஊருக்கு டிக்கெட் வாங்கியதாய் டிக்கெட் பரிசோதகரிடம் கூறினார்? [1]

(ii) எழும்பூரில் பெட்டிக்கடைகளில் தொங்கிய மஞ்சள் பத்திரிகையின் விளம்பரச் செய்தி என்ன? [2]

(iii) இரயிலில் டிக்கெட் பரிசோதகர் கேட்டதும் அரைத் தூக்கத்தோடு சட்டைப் பையில் கைவிட்ட துரை உணர்ந்தது என்னென்ன? [2]

(iv) வண்டி புறப்படும் சமயம் அவசரமாக நுழைந்த பிரயாணியைப் பற்றி எழுதுக. [5]

Question 11

[10]

இக்கதையின் கதாநாயகன் நாராயண சாமியா,துரையா? உனது கண்ணோட்டத்தில் இதனை விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.

Question 12

[10]

இக்கதையில் அகிலன் கையாண்டுள்ள சமுதாயப் புரட்சியை உலகம் ஏற்குமா என்பதை விளக்கி எழுதுக.

யான் கண்ட இலங்கை (YON KANDA ELANGAI)

Question 13

"சென்னைக் கடற்கரை தெரிந்தது.கட்டடங்கள் நெருங்கிய சென்னை நகரம் தெரிந்தது."

(i) மு.வ.விமானத்தில் தன்னுடன் எடுத்துச் சென்ற நூல்கள் யாவை? [1]

(ii) விவேகானந்தா சபையார் ஏற்பாடு செய்திருந்த அரிசிச் சோறு பற்றி ஓரிரு வரிகள் எழுதுக. [2]

(iii) விமானப் பெண் கொண்டு வந்த காகிதப் பையில் என்ன இருந்தது?அது எதற்காக? [2]

(iv) சென்னைக் கடற்கரை, இலங்கைக் கடற்கரை - ஒப்பிட்டு எழுதுக. [5]

Question 14 **[10]**

இலங்கையிலுள்ள கதிர்காமம் பற்றி விவரித்து எழுதுக.

Question 15 **[10]**

பொலனருவை கட்டிடங்களைப் பற்றி விரிவாக எழுதி, அதைப் பற்றி உனக்குள் தோன்றும் எண்ணங்களைப் பற்றியும் எழுதுக.

aglasem.com